**ஹோமாகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹோமாகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீதாவக்க பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 670,548 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கூற்றில் நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்பட்டுள்ள இருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. | இந்த சொத்துக்களை 2022 ஆம் ஆண்டில் விடுவித்து, களஞ்சிய இருப்பிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பேன். | ஆதனங்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துகளின் கீழ் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | முற் கொடுப்பனவு மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு ரூபா 3,331,160, ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,844,233 மற்றும் பண்டமாற்று கொடுக்கல் வாங்கல்கள் மூலமான பெற வேண்டியவற்றின் அதிகரிப்பு ரூபா 30,582,510 ஆகியவை சரிசெய்யப்பட வேண்டிய செயற்பாட்டு மூலதன மாற்றங்களின் பெறவேண்டியவற்றின் குறைவு / அதிகரிப்புகள் ஆகியவற்றின் கீழ் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். | |
| (இ) | கடன்பட்டோர் பதிவேட்டில் சேர்க்கப்பட்ட சில கடன்கொடுத்தோர் மீதிகள் | 2022 ஆம் ஆண்டின் கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை | கடன்கொடுத்தோர் மீதிகளை சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் கணக்கில் சேர்க்கப்படாததன் காரணமாக, 2021 திசெம்பர் 31, இல் உள்ள கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,037,061 ஆல் குறைவாகக் காட்டப்பட்டது. | எடுப்பேன். | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில், புறநெகும திட்டத்தில் ரூபா 78,014,305 ஆக இருந்த கட்டிட நன்கொடை மதிப்பு மதிப்பாய்வின் ஆண்டில் ரூபா 70,014,305 ஆக பதிவு செய்யப்பட்டமையினால் கட்டிடம் மற்றும் மூலதன மானியங்கள் கணக்கில் ரூபா 8,000,000 குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | இக்கணக்கீட்டு தவறு 2022 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | மூலதன மானியங்கள் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கிலிடப்பட வேண்டும். |
| (உ) | இனங்காணப்படாத இருப்புக் கணக்கில் உள்ள ரூபா 14,327,013 ஆன வரவு மீதிகள் மற்றும் ரூபா 96,686,140 ஆன அன செலவு மீதிகள் மீளாய்வாண்டிலும் இனங் காணப்படவில்லை. மேலும், பெற வேண்டிய நிலுவைத் தொகைக்கும் செலுத்த வேண்டிய மீதிகளுக்கும் உள்ள வித்தியாசமான ரூபா 82,365,928 ஆன ஆன மீதி முறையான அனுமதியின்றி இனங் காணப்படாத மீதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்டது. | பிரதி செய்யும் போது 2020.01.01 இல் உள்ளவாறு பேரேடுக் கணக்கு மற்றும் அட்டவணைகளில் மீதிகளுக்கு இடையே இனங்காணப்படாத மீதிகள் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு இடையே 2021 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்ட தவறுகள் நாட்குறிப்பு பதிவுகள் இட்டு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பரீட்சித்து காணப்படும் கணக்கு மீதிகளில் இனங்காணப்படாத கணக்கின் மீதியுடன் உள்ளதாகும். | இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு கணக்குகளில் சீராக்க்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட டிப்பர் வண்டியை மூலதனச் சொத்தாகக் கணக்கிட்டதன் காரணமாக, கூடுதலாக உள்ளிடப்பட்ட பெறுமதியான ரூபா 4,268,800 தொகைக்கு நாட்குறிப்பு பதிவு இலக்கம் 3 இன் மூலம் ரூபா 4,640,000 என மோட்டார் வாகனக் கணக்கில் இருந்து நீக்கப்பட்டமையினால் மோட்டார் வாகனக் கணக்கின் பெறுமதி ரூபா 371,200 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் ஊடாக நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | கடனாளர் நிலுவைகளை துல்லியமாக பதிவிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இனங்காணப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளின் கூட்டுத்தொகைக்கும் பயன்பாட்டு பதிவுப் புத்தகங்கள / அட்டவணைகளின்படி மீதிகளுக்கு இடையே ரூபா 7,260,557 வித்தியாசம் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் தலைமை அலுவலகத்தின் மீள் செலுத்த வேண்டிய பொது வைப்புத்தொகைக்கான வழங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் கணிப்பீடு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ள வைப்பு மீதிக்கும் இடையே ரூபா 1,675,934 வேறுபாடு காணப்பட்டது | 2022 ஆம் ஆண்டின் கணக்கில் திருத்தங்களைச் செய்ய நவடிக’கை எடுப்பேன். | வேறுபாடுகளை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க மேல்மாகாண உள்ளூராட்சிமன்ற சுற்றறிக்கையின் 2.2.2 ஆம் பந்தி | கெப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக ரூபா 494,500 தொகை செலுத்தியிருந்ததுடன் அதற்காக 2021 ஜுலை 01 ஆந் திகதிய சுற்றறிக்கையின் படி தொழில்நுட்ப அல்லது இயந்திர பொறியியலாளரின் ஆலோசனைகள் பெறப்படாது இருந்தது. | வாகனப் பழுது தொடர்பான பரிந்துரைகளைப் பெற சபைக்கென தொழில்நுட்ப உத்தியோகத்தர் (வாகனம்) அல்லது இயந்திரப் பொறியாளரொருவர் இல்லாதநிலையில் வெளியிலிருந்து உத்தியோகத்தர் உதவிக்கு அழைத்துச் சென்றால், அதற்கு கூடுதல் பணம் மற்றும் அதிக நேரம் எடுக்கும். நடைமுறையில் இச்செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமம் காணப்படுவதால், தேவைப்பாடு மற்றும் அவசர தேவை கருதி வாகனத்தை சீர்செய்து கொடுக்க வேண்டி ஏற்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றச் சட்டத்தின் 128 வது பிரிவு | சபை பயன்படுத்தும் 17 காணிகள் கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், மூலிகைத் தோட்டங்கள மற்றும் 31 மயானங்கள், போன்றவை சபைக்கு கையேற்கப்படவில்லை. | காணியின் உரித்தை உறுதி செய்த பின், காணி கையேற்கப்பட்டு, காணி திட்ட வரைவுப்படி எல்லைகளை குறிக்கவும், தீர்வு செய்யவும் நில அளவையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | காணிகளின் உரிமையை உறுதி செய்வது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 24 திகதியி 2155/8 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானியின் V ஆம் அத்தியாயத்தின் 296 ஆம் பந்தி | , ஒவ்வொரு உள்ளூராட்சி சபையின் அதிகார வரம்பிலும் தொழில் வரி மற்றும் வர்த்தக வணிக வரிக்கு உட்பட்ட சொத்துக்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், ஆனால் வர்த்தமானியின் படி 2022 மார்ச் 14, அன்று வரையலும் கணக்கெடுப்பு பணிகள் தொடங்கப்படவில்லை. | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை | வர்த்தமானியின் படி சொத்து கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். |
| ஈ. | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| I. | நிதிப் பிரமாணம் 177(1) | சபையின் வருமானத்தின் ஒரு பகுதியாகவோ இல்லாவிட்டாலோ அல்லது தினசரி பெறப்பட்ட முழுத் தொகையாகவோ அல்லது முடிந்தவரை விரைவாகவோ அல்லது உடனடியாகவோ விதிமுறைப் பிரகாரம் முறையான பெறுதல் உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரால் செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் ,அத்தகைய பணம் ஒரு வாரத்திற்கு மேல் செலுத்தத் தாமதமான சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. | சேகரிக்கப்படுகின்ற பணத்தை உடனடியாக சபைக்கு வசூலிக்கப்படும் வகையில் ஒப்பந்த விதிமுறைகளை திருத்த முடிவு செய்யப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின்படி சேகரக்கப்படும் பணத்தை விரைவில் சபைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். |
| II. | நிதி பிரமாணக் குறிப்பு 880 | அரசாங்கப் பணம், வருமானம் மற்றும் உடமைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாகச் செய்ய வேண்டும் எனும் | பிணைத்தொகையை பிணைத்தொகையை வைப்புச் செய்ய வேண்டிய ஐந்து அதிகாரிகளிடம் இருந்து பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு | பிணைத்தொகையை பெற ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நோக்கிலான அரசாங்க உத்தியோகத்தர் பிணை சட்டம் 612 இன் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்கள் பிணைத்தொகை ஒன்றை சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும் ஐந்து உத்தியோகத்தர்கள் குறித்த பிணைத்தொகையை வைப்புச் செய்திருக்கவில்லை | வருகின்து. | |
| (உ) | 2015 ஜுலை 14 ம் திகதியிடப்பட்ட 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வெசயல் நிமித்த கட்டுநிதி வழங்கும் செயற்பாட்டிற்கு அண்மித்த திகதியொன்றில் கட்டுநிதி பெறப்பட வேண்டும் எனினும் வேலை முடிந்த 10 நாட்களுக்குள் முற்பணம் செலுத்தப்பட வேண்டிய போதும் 4 முதல் 60 நாட்கள் வரை தாமதமாகிய 30 சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டில் அவதானிக்கப்பட்டது. | முற்பண மீள் கொடுப்பணவில் மீண்டும் காலதாமதம் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கையின்படி நிலுவைத் தொகையை தாமதமின்றி செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். |
| **(ஊ** | 2021 செப்டம்பர் 29 ம் ஆம் திகதிய 01/2021 ம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 2.4 | ஒரு சமூகம் சார்ந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் ஒன்றை வழங்கும் போது, சம்பந்தப்பட்ட சமூகம் சார்ந்த அமைப்பு மூன்று ஒப்பந்தங்களுக்கு மேல் ஈடுபடக் கூடாது என்ற போதிலும் சுற்றறிக்கைக்கு மாறாக, 05 சமூகம் சார்ந்த நிறுவனங்களிற்கு 03 ஒப்பந்தங்களிற்கு மேல் வழங்கப்பட்ட சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இப்பிரதேசங்களுடன் தொடர்புடைய பிற சங்கங்கள் பதிவு செய்யப்படாததாலும், திட்டப்பணிகள் ஓராண்டுக்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டியதாலும், ஒரு சங்கத்திற்கு வழங்கக்கூடிய தொகைக்கு மேல் தொகை அதிகரிக்காமையினாலும்பே ாதிய கால அவகாசம் இல்லாததாலும், குறிப்பிட்ட அந்தந்த சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா215,580,460 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 216,747,584 ஆக இருந்தது. நிதி விளைவுகளை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,167,124 ஆல் வீழ்ச்சியடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

## 2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நீதிமன்ற தண்டப்பணம்** | | |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஹோமாகம மற்றும் கஸ்பேவ நீதவான் நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டபணத் தொகை ரூபா 92,239,111 ஆகும். | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான அனைத்து அபராதங்களும் பெறப்பட்டு 2019 ஆம் ஆண்டு தொடர்பான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நீதிவான் நீதிமன்றங்களின் நீதிமன்ற அபராத உப ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நீதிமன்ற அபராதத் தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீகொட பொருளாதார மத்திய நிலையத்திற்காக குத்தகைக்கு 1 ஏக்கர் 2 ரூட், 10.31 பேர்ச் அளவுடைய சபைக்குச் சொந்தமான காணி 2003 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் 33 வருட காலத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காக 2014 முதல் 2021 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவைத் தொகையாக ரூபா 198,450,000 நில வாடகை மற்றும் அபராதம் 2021 திசெம்பர் 31 அன்று அறவிட வேண்டியிருந்தது. குத்தகைதாரர் ஒப்பந்தத்தின்படி வாடகையை செலுத்தாவிட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குத்தகை ஒப்பந்தத்தில் இல்லாததால், நிலுவை வாடகை அறவிடுவதற்கோ அல்லது குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்யவோ முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மீகொட பொருளாதார நிலையத்தின் வாடகையை செலுத்தாத பட்சத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குத்தகை ஒப்பந்தத்தில் இடம் பெறாத காரணத்தினால் இது தொடர்பாக சபையின் சட்டத்தரணியின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளவுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தேவையான நடவடிக்கைகளை விரைந்து செய்து, நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

(இ) முத்திரை கட்டணம்

| | | |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 378,443,654 ஆகும். | ஹோமாகம பிரதேச சபைக்கு, கொழும்பு தெல்கந்த காணி பதிவு அலுவலகத்திலிருந்து 2019 ஆம் ஆண்டிலிருந்தும், ஹோமாகம காணி பதிவு அலுவலகத்திலிருந்து 2020 ஆம் ஆண்டிலிருந்தும் உறுதிகளுக்கு முத்திரை கட்டண அட்டவணையை தயாரிக்கப் பட்டுள்ளது. தகவல் கிடைத்தவுடன் அதற்கான ஆவணங்கள் நாளதுிக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். | முத்திரை கட்டணத்தை அறவிடுதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயல்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்காக, குடிநீரைப் பெறும்போது வீதிக்கு ஏற்பட்ட சேதங்களிற்காக உள்ளூராட்சி மன்றத்தால் செலுத்த வேண்டிய ரூபா 9,863,471 மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்டது. விண்ணப்பதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் விண்ணப்பதாரர்களால் வீதியை புனரமைப்பதற்கு உடன்பட்டு உள்ளூராட்சி மன்றத்தால் பணம் விடுவிக்கப்பட்ட போதும் ஆனால் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கபடா திருந்ததுடன் விடுவிக்கப்பட்ட பாதைகளில் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள பாதைகள் எவை என்பதை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | பின்தொடர் நடவடிக்கை எடுத்து விடுவிக்கப்பட்ட பாதைகளில் தற்போது செப்பனிடப்பட்டுள்ள பாதைகள் எவை என்பதை கண்டறிய தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்.

| | | | |
|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் 93 வது பிரிவின்படி கழிவு முகாமைத்துவத்திற்கான வருடாந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை | கழிவு முகாமைத்துவக் குழு மற்றும் JICA உடன் இணைந்து 2022 ஆம் ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கலாம். | கழிவு முகாமைத்துவத்துக்கான வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | உக்கும் கழிவுகளை மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லாமல், அதை | உரக்கிடங்கு அமைக்க நிதிஏற்பாடு | துரிதமாக சேதனப் |

| | | | |
|---|---|---|---|
| | சேதனப் பசளை உற்பத்தி செயன்முறையாக மாற்றி உர விற்பனை மூலம் சபைக்கு வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய எத்திட்டமும் 2022 மார்ச் இறுதிவரை செயற்படுத்தப்படவில்லை | கோரப்பட்டுள்ளது. | பசளை உர உற்பத்தி மற்றும் வருமானம் ஈட்டும் வழிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | நகரின் மையத்தில் உள்ள குப்பை மேட்டிற்கு குப்பைகளை சேகரிப்பதன் மூலம் நகர்ப்புற அசிங்கம், துர்நாற்றம் மற்றும் மாசுபாடு ஆகிய அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. | இவ்விடத்திற்கு கழிவுகளை குறைக்க சேதன உர உற்பத்தித் மற்றும் வள மையம் ஆகியவற்றை அமைப்பதற்கான திட்டம் முன்மொழியப்பட்டுளது. | கழிவுப்பொருள் சேகரிக்கும் இடம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ). | கிரிவத்துடுவ கஹடகஹவத்தலந்த, புபுது உயன பொது நிலங்கள் | | |
| | 1996 சனவரி 23 திகதிய 497 ஆம் இலக்க உறுதி மூலம், த பைனான்ஸ் கம்பனி சபைக்கு வழங்கிய லொட் இல. 106 இன் கீழ், 1 ரூட் 7.52 பேர்ச் பொது வசதி காணியில் சுமார் 14.66 பேர்ச் நிலப்பரப்பில் அதனை சுற்றியுள்ள பொது மக்கள் கொங்கிரீட் கூரையுடன் கூடிய வீட்டையும், தற்காலிக கடையொன்றையும் நிர்மாணித்தருந்தமை தெரியவந்தது. மேலும் அந்த வீடுகளுக்கு நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதையும் அவதானிக்கப்பட்டதுடன் வரி மதிப்பீட்டிற்கும் விண்ணப்பிக்கப் பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த ஆண்டு இறுதி வரை இந்த நிலம் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கெண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கிரிவட்டுடுவ கஹடகஹ வத்தலந்த, புபுது உயன பொதுக் காணியில் அனுமதியற்ற நிர்மாணமொன்று உள்ளதால், அதனை சுவீகரிப்பது தொடர்பான ஆவணங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை களுக்காக சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சட்ட அலுவலர் நில அளவைத் திட்ட வரைபடத்தில் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை சரி செய்ய, சபையின் நில அளவையாளருக்கு அவை வழங்கப்பட்டுள்ளன. | உடனடியாக காணியின் உரித்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஜல்தர ரணால லக்சிரி பூங்கா பொது காணி | | |
| | ஜல்தர ரணால லக்சிறி பூங்காவில் அமைந்துள்ள 1 ஏக்கர் 19.50 பேர்ச் விளையாட்டு மைதானத்தை அண்டிய பொது வசதி காணி தனியார் ஒருவரால் சுவீகரிக்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31, வரையிலும் இந்த நிலங்களை வேறுபடுத்த சபை | தொழில்நுட்ப அலுவலரின் வெளிக்கள ஆய்வுக்குப் பின்னர் உரிய தரைத் திட்டத்தின்படி நிலத்தின் எல்லைகளை குறிக்கவும், தீர்வு செய்யவும் நில அளவையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது | காணியை உடனடியாக சபைக்கு பெற்றெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்கவில்லை. | சரியான எல்லைகளைக் குறித்த பின்னர், பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும் | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் கடன்கள்**<br>மரணித்தவ்கள், ஓய்வு பெற்றவர்கள், பணியில் இருந்து இடைவிலகியவர்கள் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட 47 பேரிடம் இருந்து பெற வேண்டிய ஆதன, இடர், விசேட மிதிவண்டிகள் மற்றும் விழாக் கடன்கள் என ரூபா 1,600,949 ஐ அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | ஊழியர் கடன் மீதிகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்-

### 4.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்'' 2030 இன் படி 17 இலக்குகள் சபையால் அடையப்பட வேண்டியிருந்தாலும், ஹோமாகம பிரதேச சபை 9 இலக்குகளுக்கான திட்டங்களைத் தயாரித்துள்ளது. அந்த நோக்கங்களின் கீழ், 2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்ட போதிலும், 06 திட்டமிடப்பட்ட பணிகள் ∴ நிறைவேற்றப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கு திட்டமிடும் போது, அந்த வருடத்தில் கொரோனா தொற்று நிலை மறைந்து விடும் என்று கருதி திட்டமிடப்பட்டாலும், அந்த ஆண்டிலும் தொற்றுநோய் நிலவியதால், திட்டமிடப்படாத செயல்களுக்கு அதிக செலவு செய்ய வேண்டியிருந்தது. | பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |